ஊராட்சி மன்ற தலைவர் செவ்வாப்பேட்டை ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி.அ.டெய்சிராணி

ந.க.எண்: 1 /2021/உள **நாள்: 16.12.2022**

பொருள் : மனைபிரிவு ஒப்புதல் அனுமதி – திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் - செவ்வாப்பேட்டை ஊராட்சி – ஏகம்பன்பேட்டை திருமம் -ல் - சர்வே எண் 23/2A1 -ல் - 14 வீட்டு மனைகள் - பரப்பளவு 2062.சமீ ஏக்கரில் – மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி மனைபிரிவிற்கு ஒப்புதல் அனுமதி அளித்து உத்தரவிடல் - சாரந்து.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண். 92பட6ப0/திவம2 நாள்: 26/11/2022
2. செவ்வாப்பேட்டை ஊராட்சி மன்றம் தீர்மான எண் (ம) நாள்: 26/11/22 ல்ல

* * * * *

உத்தரவு

பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், அவர்களின் கடித ந.க.எண் 92பட6ப0 /திவம2 நாள்: 26/11/2022 திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த செவ்வாப்பேட்டை ஊராட்சி ஏகம்பன்பேட்டை திருமம் சர்வே எண் 23/2A1 -ல் 14 வீட்டு மனைகள் பரப்பளவு 2062 சதுரமீக்கரில் கொண்ட மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அனுமதி அளித்து அரசு விதிகளின்படி வரன்முறைபடுத்தும் வகையில் அரசுக்கு செலுத்த வேண்டிய உரிய தொகை அரசு மற்றும் உள்ளாட்சி நிதி தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைகளுக்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனையின் ஊடே Tower Line செல்லக் கூடாது.
2. மனையின் ஊடே அரசு புறம்போக்கு ஏதும் அமையக் கூடாது.
3. மனையின் ஊடே நீர்நிலைகள் ஏதும் செல்லக் கூடாது.
4. மனை உரிமம் குறித்து ஆவணங்கள் சரியானவை இல்லை என அறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.
5. இம்மனை பொதுபாதையாக அமையக்கூடாது.
6. மனைப்பிரிவில் சாலைகளின் இருபுறங்களிலும் முறையாக கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்ட பின்னர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தேவைப்படும் பட்சத்தில் முறையாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அனைத்து மனைகளும் விற்கப்பட்டு முடிக்கப்படும் வரை கழிவுநீர் கால்வாய் முழுமையாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பராமரிப்பு செய்யப்பட வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளில் குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் தங்களது மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.

தலைவர் / செயல் அலுவலர்
ஊராட்சி மன்ற தலைவர்
செவ்வாப்பேட்டை ஊராட்சி
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:

Tarun H Salot
Flat No 1C Courtyard Vijaya Shanti Apts.
Door No 27 Pycroft Garden Lane
Nungambakkam.